<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.</u>

<u>C.C.No.80 /2025</u>

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் நாள் திங்கள் கிழமை அரசு தரப்பு சாட்சி–02, திரு. அம்மாசி என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் பிரமாணச் சட்டம் பிரிவு 4 ன்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.அம்மாசி | வயது | : | 66/26 |
| த/பெ/ க.பெ./ | : | ராமசாமி | தொழில் | : | **விவசாய வேலை** |
| ஊர் | : | **அமிர்தராயன் கோட்டை** | நிலை | : | LW 02/PW02 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**(எதிரி ஆஜர் )**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் அமிர்தராயன்கோட்டையில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா. 1 எனது மனைவி. ஆஜர் எதிரி தெரியும் எனது ஊர்க்காரர். கடந்த 2024 வருடம் தேதி மாதம் நினைவில் இல்லை மாலை சுமார் 4.00 மணியளவில் பரப்பவெளியில் நான் புல் அருத்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி என்னை உதைத்துது கீழே தள்ளி நான் எழுவதற்குள் அவர் கையில் வைத்திருந்த அருவாளால் என் இடது பக்க காதுக்கு கீழே வெட்டி இரத்த காயத்தை ஏற்படுத்தினார். **(சாட்சி அவரது இடது**

**காது அருகே உள்ள தழும்பை காட்டினார். அந்த தழுப்பு இடது காதின் முன்புறம் ஆள்காட்டி விரல் அளவிற்கு காணப்பட்டது).** நான் உடனடியாக துண்டை எடுத்து அந்த காயத்தில் வைத்துகொண்டு நாட்டார் வீரமணி கடைக்கு சென்று விட்டேன். பின்னர் அந்த கடையில்இருந்தவர்கள் என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் ஜெயங்கொண்டம் அரது மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக அரியலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பின்னர் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவமணைக்கு சென்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு/வி இல்லை.**

/ உண்மை நகல் /

ஒம்/-ப.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.